மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னை இறக்குவதில் திரு. துரை முருகன் அவர்களுக்கு இவ்வளவு அக்கறையிருக்குமானால், மெஜாரிட்டியோடு தீர்மானத்தை நிறைவேற்றலாம் என்ற நம்பிக்கை இருக்குமானால் நிச்சயமாக இதை பின்னால் எடுத்துக் கொள்ளும் போது பேசலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது இந்தப் பிரச்னையை இத்துடன் முடித்துவிடுங்கள்.

திரு. துரை முத்துசாமி: பாயின்ட் ஆப் ஆர்டர்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து உட்காருங்கள்' இப்படி போய்க் கொண்டிருந்தால், எல்லோருக்கும் இது போன்று சந்தர்ப்பம் கொடுக்க வேண்டியிருக்கும்.

திரு. துரை முத்துசாமி: தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக்களில் மீட்டர்கள் பொருத்தப்படவேண்டும் என்று அரசாங்கத்திலிருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி இதுவரை எத்தனை மீட்டர்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன என்ற ஒரு கேள்வியை 30—8—1978-ம் தேதியே ஒரு குறுகிய கால வினாவாகக் கொடுத்திருந்தேன், அதற்கு இதுவரையிலும் பதில் இல்லை. என்ன காரணம் என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்....

(பதில் இல்லை)

(ஈ) உறுப்பினர் கைது பற்றிய செய்தி குறித்து.

திரு. பொ. உத்திராபதி: 11—9—1978-ம் தேதி சபை நடந்துகொண்டிருக்கும் போதே, சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவசாமி அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அது பற்றி தங்களுக்குத் தகவல் வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தத் தகவல் வந்தது, ஆனால் தொடர்ந்தாற்போல் அவர் விடுதலை செய்யப்பட்டுவிட்டார் எனற தகவலும் ஒன்றாக சேர்ந்து வந்ததால் தான் அதை சபையில் அறிவிக்கவில்லை. வேறு ஒன்றுமில்லை. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

4. அறிக்கை அளித்தல்

விதி 82-ன் கீழ் கல்வி அமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரி ஆசிரியர்கள் கூட்டு நடவடிக்கைக் குழுவின் பிரதிநிதிகள் என்னை சந்தித்து செப்டம்பர் 9, 10 தேதிகளில் கோரிக்கைப் பட்டியலை அளித்தனர். எல்லா கோரிக்கைகளை குறித்தும் விரிவான பேச்சு வார்த்தைகள் நடந்து இறுதியாக கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.